விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் 18.06.2023 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.10 கோடி மதிப்பில் சிவகாசி மாநகராட்சி புதிய அலுவலக கட்டடம் கட்டுவதற்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தலைமையில், சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் முன்னிலையில், நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம்தென்னரசு அடிக்கல் நாட்டினார்.

ரூ. 10 கோடி மதிப்பில் -

சிவகாசி மாநகராட்சி அலுவலகக் கட்டிட கட்டுமானப் பணிகள்!

நிதி, மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அடிக்கல் நாட்டினார்!

சிவகாசி, ஜூன் 24-

சிவகாசி மாநகராட்சி அலுவலக புதிய கட்டடம் ரூ.10 கோடி மதிப்பில் கட்டும் பணிகளுக்கு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அடிக்கல் நாட்டினார்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் 18.06.2023 அன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.10 கோடி மதிப்பில் சிவகாசி மாநகராட்சி புதிய அலுவலக கட்டடம் கட்டுவதற்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், சிவகாசி மாநகராட்சி மேயர் திருமதி சங்கீதா இன்பம் முன்னிலையில், நிதி மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம்தென்னரசு அடிக்கல் நாட்டினார்.

இதில் அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் அரசின் திட்டங்கள் பொதுமக்களுக்கு எளிதிலும், விரைவாகவும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு நிர்வாக கட்டமைப்புகளை செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், பொதுமக்கள் அரசின் நலத்திட்ட உதவிகளை எளிதாக பெற்று பயன் பெற ஏதுவாகவும், அரசு அலுவலர்கள் சிரமமின்றி பணி புரிய வசதியாகவும் பல்வேறு நிதித்திட்டங் களின் கீழ் நிதிகளை ஒதுக்கீடு செய்து, பல்வேறு துறைகளுக்கு நவீன வசதிகளுடன் கூடிய அரசு அலு வலகக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

அதன்படி, இன்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் ரூ.10 கோடி மதிப்பில் சிவகாசி மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்த புதிய அலுவலக கட்டிடம் வாகன நிறுத்து மிடத்துடன் கூடிய அடித்தளம் 1501.97 சதுரடியிலும், தரைத் தளம் 1647.10 சதுரடியிலும், முதல் தளம் 1403.80 சதுரடியிலும், மேல்தளம் 179.47 என மொத்தம் 4732.34 சதுரடி பரப்பளவில் பல்வேறு வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

மேலும், இந்த புதிய கட்டிடப்பணிகளை தரமானதாகவும், விரைவாகவும் அரசு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள காலக்கட்டத்திற்குள் விரைந்து முடித்து, பயன்பாட்டிற்கு கொண்டு வர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களை கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிவகாசி கோட்டாட்சியர் விஸ்வநாதன், மாநகராட்சி ஆணையாளர் சங்கரன், மாநகராட்சி பொறியாளர் சாகுல் ஹமீது, சிவகாசி மாநகராட்சி துணை மேயர் திருமதி விக்னேஷ்பிரியா, மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை நேரு விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் (17.04.2023) அன்று துவக்கி வைக்கப்பட்ட விளையாட்டு போட்டியில் நாகலாபுரம் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் எலக்ட்ரீசியன் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவி சசிகலா போட்டியில் மாநில அளவில் இரண்டாம் இடம் பிடித்து வெற்றி பெற்றதை அறிந்த விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன் இம்மாணவியை நேரில் அழைத்து பாராட்டி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ஊக்கத்தொகை வழங்கினார். தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் இம்மானுவேல் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்

மக்களுக்கு பயனளிக்கும் மகத்தான திட்டம்!

'தினத்தந்தி' நாளேடு புகழாரம்!

சென்னை, ஜூன் 24-

தமிழ்நாடு அரசின் நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மக்களுக்கு பயனளிக்கும் மகத்தான திட்டம் என்று 'தினத்தந்தி' நாளேடு புகழாரம் சூட்டி தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான், எந்த செயலையும் உற்சாகமாக செய்ய முடியும். அதனால்தான், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை முன்னோர்கள் மட்டுமல்லாமல், இப்போதும் பெரியவர்கள் அறிவுரையாக சொல்லி வருகிறார்கள்.

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினும் பல கூட்டங்களில் பேசும்போது கல்வியையும், மருத்துவத்தையும் அரசு தனது இரு கண்களாக பாவித்து அதற்கேற்ற திட்டங்களை தீட்டிவருகிறது என்று கூறுவது வழக்கம். மருத்துவ வசதிகள் அனைவருக்கும் தங்கு தடையில்லாமல் கிடைக்க வேண்டும் என்பதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், தாலுகா அளவில் மருத்துவமனைகளும், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளும் மக்களுக்கு தேவையான மருத்துவ பரிசோதனைகள், மருத்துவ சிகிச்சைகளை வழங்கி மருந்து மாத்திரைகளையும் வழங்கி வருகின்றன.

நகர்ப்புறங்களில் பெரிய மருத்துவமனைகள் இருந்தாலும், மக்களுக்கு வீட்டுக்கு அருகிலேயே மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், ஆட்சி பொறுப்பேற்ற ஓராண்டு நிறைவடைந்த நாளான கடந்த ஆண்டு மே 7ந் தேதியன்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சட்டசபையில் 110வது விதியின் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், "தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் இருப்பதைப்போல, நகர்ப்புறங்களில் அரசு பொது மருத்துவமனைகளை நோக்கி மக்கள் கூட்டம் அலைமோதி வரும் நிலையை மாற்றும் வகையில், ஒருங்கிணைந்த, தரமான மருத்துவ சேவைகளை மக்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வழங்கிடும் வகையில், சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 21 மாநகராட்சிகள், மற்றும் 63 நகராட்சி பகுதிகளில் 708 நகர்ப்புற மையங்கள் புதிதாக அமைக்கப்படும்" என்று அறிவித்தார்.

இப்போது முதல் கட்டமாக சென்னை உள்பட மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார். ஒவ்வொரு நகர்ப்புற நலவாழ்வு மையங்களிலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு தூய்மை பணியாளர் ஆகியோர் பணியாற்றுகிறார்கள். இதை தொடங்கியதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகளும் டாக்டர்கள், மருத்துவ பணியாளர்களுக்கு கிடைத்துள்ளன.

தலையங்கம்

தினத்தந்தி

23.6.2023 (வெள்ளிக்கிழமை)

நகர்ப்புற நல வாழ்வு மையங்கள்!

உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான், எந்த செயலையும் உற்சாகமாக செய்ய முடியும். அதனால்தான், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை முன்னோர்கள் மட்டுமல்லாமல், இப்போதும் பெரியவர்கள் அறிவுரையாக சொல்லி வருகிறார்கள். முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினும் பல கூட்டங்களில் பேசும்போது கல்வியையும், மருத்துவத்தையும் தனது அரசு இரு கண்களாக பாவித்து அதற்கேற்ற திட்டங்களை தீட்டிவருகிறது என்று கூறுவது வழக்கம். மருத்துவ வசதிகள் அனைவருக்கும் தங்கு தடையில்லாமல் கிடைக்க வேண்டும் என்பதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், தாலுகா அளவில் மருத்துவமனைகளும், மாவட்ட மருத்துவமனைகள், மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளும் மக்களுக்கு

நகருக்குள் பஸ்சிடம் செல்வது சிரமமில்லை... ஆட்டோவில் செல்கிறாயா? அல்லது காரில் செல்கிறாயா? மகுடமல்லவா!

வீட்டில் அருகிலேயே நகர்ப்புற நலவாழ்வு மையம் இருப்பதால் அந்த கவலையில்லை. நடந்தே சென்றுவிடுகிறேன் மாமா!

இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் மகப்பேறு நல சேவைகள், பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தை நல சேவைகள், வளர் இளம் பருவத்தினருக்கான சேவைகள், குடும்ப கட்டுப்பாடு சேவைகள், தொற்று நோய்களுக்கான சேவைகள், தொற்றாநோய்களுக்கான சேவைகள், கண், காது, மூக்கு, பல், வாய் மற்றும் தொண்டை நோய்களுக்கான சேவைகள், முதியோர் மற்றும் நோய் ஆதரவு சேவைகள், அவசர மருத்துவ சேவைகள், மனநல சேவைகள் மற்றும் யோகா போன்ற பல்வேறு நலவாழ்வு சேவைகள் வழங்கப்படுகின்றன.

மேலும் 172 வகை முக்கியமான மருந்துகளும், 64 வகை அவசியமான ஆய்வக சேவைகளும் ஆண்டு முழுவதும் இந்த நகர்ப்புற நல வாழ்வு மையங்களில் தங்கு தடையின்றி கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது மிகவும் வரவேற்புக்குரியது.

இந்த நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் மூலம் நகர்ப்புறங்களில் உள்ள ஏழை எளிய, நடுத்தர மக்களுக்கு அவசர சேவைகள் உள்பட அனைத்து சேவைகளும் வீட்டுக்கு அருகிலேயே குறைந்த நேரத்தில் கிடைக்கும் என்பதால், இந்த மருத்துவ திட்டம் ஒரு மகத்தான திட்டம். மக்களுக்கு பயனளிக்கும் திட்டம். மக்கள் வரவேற்கும் திட்டம்.

இவ்வாறு 'தினத்தந்தி' நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

மதுரை மாநகர் மாவட்டம் பொன்மேனி மந்தை திடலில் கழக இளைஞரணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., ஆலோசனையின் படி பகுதி இளைஞரணி நிர்வாகி வழக்கறிஞர் எம்.சிங்காரவேலன் தலைமையில் தலைமை தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.தனசெல்வம், மாநகர் இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.மூவேந்திரன், கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர். கணேசன், மாமன்ற உறுப்பினர் நாகநாதன் முன்னிலையில் நடைபெற்ற தெருமுனைக் கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் கரூர் முரளி சிறப்புரையாற்றிய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் லோகநாதன், தவமணி, பரமசிவம், கார்த்திக், அருண்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கழகத்தினர் உள்ளனர்.

தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன், எம்.பி., அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

நேற்றைய தொடர்ச்சி

திருப்பத்தூர் மாவட்டம்

அமைப்பாளர் - சே.வெங்கடேஷ், 21/4ஏ, கோவிலூர்ரோடு, சிவராஜ்பேட்டை, திருப்பத்தூர்.

துணை அமைப்பாளர்கள் - ஆர்.எஸ். வசந்த்ராஜ், 37/11, கஸ்பாமெயின்ரோடு ஆம்பூர் 635802. தே. தமிழரசன் 5, அண்ணாதெரு, கே. எம். சாமிநகர், கஸ்பாபி. ஆம்பூர், திருப்பத்தூர்மாவட்டம் டி. மதன் 18/6, இரட்டைமலைசீனிவாசாபேட்டை, திருப்பத்தூர்நகரம், திருப்பத்தூர்மாவட்டம் பி.வி.பிரேம்குமார் 14பி, புதுப்பேட்டை மெயின்ரோடு, திருப்பத்தூர்நகரம் எம். பி. மணிமாறன், மேல்குப்பம்சி.பி. குப்பம் அஞ்சல், வாணியம்பாடி (தா) திருப்பத்தூர் . வெ. கணேஷ்பாபு, 19, கோயில்தெரு, படகுப்பம், ஆலங்காயம், திருப்பத்தூர் எஸ். வேல்முருகன் குனிச்சியூர், வெலக்கல் நத்தம், நாட்றாம்பள்ளிதாலுகா, திருப்பத்தூர்மாவட்டம்

திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

அமைப்பாளர் - பி. எல். ஆனந்தன் , தெக்களூர், சூரியநகரம், திருத்தணிதாலுகா, திருவள்ளூர்.

துணை அமைப்பாளர்கள் - இரா. குகன் 1/281, பெரியதெரு, கடம்பத்தூர், திருவள்ளூர் , 631203 கே. எல். ஹேமாத்திரி, 9, குமரவேல்நகர், ஜெயாநகர், திருவள்ளூர் 602001. எஸ். ஆர். ஜெயேந்திரன், 1/59, நடுகொண்டபுரம், சிவ்வாடாஅஞ்சல், திருத்தணி, திருவள்ளூர், ஜெ. கலைவாணன், 520, பூஞ்சோலைநகர், சின்னம்மாபேட்டைஅஞ்சல், திருவலாங்காடு, திருவள்ளூர் 631210. கே. ஈ. சபரீசன், 23, வடக்குமாடவீதி, பூங்காத்தூர், திருவள்ளூர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்

அமைப்பாளர் - கே. ராஜேஷ், 82/1, திருவள்ளூர்சாலை, ஊத்துக்கோட்டை, திருவள்ளூர். 602026

துணை அமைப்பாளர்கள்- பா. பரத்குமார், 1/10 கண்ணம்பாக்கம்கிராமம், பல்லவாடாஅஞ்சல், கும்மிடிப்பூண்டி 601202. கு. லோகநாதன், 46, பஜார்தெரு, வாயலூர்குப்பம்கிராமம், திருவெள்ளைவாயல்அஞ்சல், பொன்னேரிவட்டம் 601203. கே. பிரபாகர், 72, கோபால்ரெட்டி, கண்டிகைகிராமம், எஸ். ஆர்.கண்டிகைஅஞ்சல், கும்மிடிப்பூண்டி 601201. எஸ். கார்த்திகேயன், 37, பிரதானசாலை, தாராட்சிகிராமம், ஊத்துக்கோட்டைவட்டம். கு. செல்வம், 1/185 மேடங்குளம், அருமந்தை, பூதூர் அஞ்சல், சென்னை 600067, டாக்டர் ர. ராஜ்குமார், டாக்டர்அம்பேத்கார்தெரு, வல்லூர்கிராமம்&அஞ்சல், பொன்னேரிவட்டம். சென்னை 600120. ஆர். கே. தினகரன், 408, மெயின்ரோடு, பேட்டைமேடுகாலனி, வடமதுரைஅஞ்சல், ஊத்துக்கோட்டை 601102.

சென்னை வடகிழக்கு மாவட்டம்

அமைப்பாளர் - பி.முனியாண்டி, 1/1577, முனுசாமிபிள்ளைதெரு, பாலமுருகன்நகர், ஆட்டந்தாங்கல், சென்னை.

துணை அமைப்பாளர்கள் - டி.பி. பாலசுந்தரம், 30/5சி, தெற்குபிரகாரம்தெரு, காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை 19, ஆர். நாகராஜ்,17, சோத்துப்பாக்கம் சாலை, செங்குன்றம், சென்னை 52. ம. ஆனந்குமார், 4/4, முதல்பிரதானசாலை, ஈஸ்வரன்நகர், பம்மதுகுளம், செங்குன்றம், சென்னை52. எஸ். டி. அமிர்தராஜ், 2/63 பெருமாள்கோவில்தெரு, வடப்பெரும்பாக்கம், சென்னை600060, இரா. பரசுராமன், 14/17 டி.எஸ்.ஆர்நகர்விஸ்தரிப்பு, திருவொற்றியூர், சென்னை 19. பி.எஸ். பரசு பிரபாகரன், 146, காசி விஸ்வநாதர்கோவில் குப்பம், விம்கோ நகர், திருவொற்றியூர், சென்னை600 019. வே. ஞானம், 4/470 ராஜாசேதுபதிதெரு, பி.டி. மூர்த்திநகர், பாடியநல்லூர், சென்னை58.

சென்னை கிழக்கு மாவட்டம்

அமைப்பாளர் - ம. அசோக்குமார், 13/15, திப்புத்தோட்டம் 4வதுதெரு, கொளத்தூர், சென்னை 600011

துணை அமைப்பாளர்கள் - எ. பாபுராஜ், 6.41வதுசர்.சி.வி. ராமன்தெரு, ஜி.கே. எம். காலனி, பெரியநகர், கொளத்தூர், சென்னை82. வி.ஜெ.திலிப்ராஜ், 53சி/30, உட்வார்ப் 2வதுசந்து, வால்டாக்ஸ்சாலை, சௌகார்பேட்டை, சென்னை600001. எஸ். வடிவேல், 168 , கல்யாணபுரம், யானைகவுனி, 6வதுதெரு, சௌகார்பேட்டை, சென்னை600001. எம். கமலநாதன், 50ஏசந்திரயோகி, சமாதிரோடு, சாமியார்மடம், பெரம்பூர், சென்னை12. ஆர். சீனிவாசன், 26/67 சுப்பராயன் 4வதுதெரு, நம்மாழ்வார்பேட்டை, சென்னை12. என். மோகன்குமார், 29/3 முனுசாமிதெரு, அயன்புரம், சென்னை600023. த. விஜயகுமார், 9/108, பிடைப், சிட்கோநகர், வில்லிவாக்கம், சென்னை 600049. பி.ஆர். யஷ்வந்த்குமார், 55/26 முருகப்பா தெரு,புரசைவாக்கம், சென்னை600007. கே. ஜெயகுமார், டி11 நரியங்காடுபோலீஸ் குடியிருப்பு, சென்னை - 600002. சி. லதா, 1195/2 15 வதுதெரு, மேற்குகாலனி, அண்ணாநகர்மேற்குவிரிவாக்கம், முகப்பேர், சென்னை600050. எம். இளங்கோவன், 35, இராமன்தெரு, இராமாபுரம், அம்பத்தூர், சென்னை 600053. எ. விஜய், 75எ, பிளாட்எண்.9, ஜெயாஆர்கேட், ரயில்வேஸ்டேஷன்ரோடு, வெங்கட்ராமன்நகர், கொரட்டூர், சென்னை 600080.

மதுரை வடக்கு மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - மு.ராஜவேல், ஆலாத்தூர், திருமால்புரம் அஞ்சல், மதுரை 14. பா.சிவராஜ், 96, மாரியம்மன்கோவில்தெரு, மேலபனங்காடி, வாகைகுளம், மதுரை 17. எம்.எஸ். பிரதாப், 192, டி. கரடிக்கல், டி . மேட்டுப்பட்டி, வாடிப்பட்டி, மதுரை625503

திருச்சி மத்திய மாவட்டம்

அமைப்பாளர் - எஸ். பிரபாகரன், 2/19, செந்தமிழ்புரம், திருச்செந்துரைகிராமம், ஜீயபுரம் 639101. திருச்சி மாவட்டம்.

துணைஅமைப்பாளர்கள் - இரா. ஜெயபிரகாஷ், 5/18, பாண்டமங்கலம், உறையூர், திருச்சி 620003. த. ராஜ்கமல், 2/72, மெயின்ரோடு, கோவண்டாகுறிச்சி, புள்ளம்பாடி(அ), இலால்குடி, திருச்சி. பெ.சந்துரு, 57, தச்சக்குடி, குழுமணி அஞ்சல், திருச்சி. கா. சுவாமிநாதன் 1/46, மேக்குடிஅஞ்சல், ஜீயபுரம்வழி, திருவரங்கம், திருச்சி 639101. த. கௌதம் 4, 51சி, மெயின்ரோடு, கிராப்பட்டி, திருச்சி 12. ஜோ. பிரவின், 71, கான்வென்ட்தெரு, கிராப்பட்டி, திருச்சி 12. கு. முத்துலட்சுமி, 22/12, பாரதிதெரு, திருவாணைக்கோவில், திருச்சி 5. க. சத்தியசீலன், 88ஊ, புதுதெரு, அபிசேகபுரம், லால்குடி.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

அமைப்பாளர் - செ. தமிழ்செல்வன், 1/43 வெலகலஅள்ளிகிராமம், ஆளப்பட்டி அஞ்சல், கிருஷ்ணகிரி.

துணைஅமைப்பாளர் - வி. சீனிவாசன், 1/209, இராஜாஜிநகர், 4வதுகிராஸ், இராயக்கோட்டைரோடு, கிருஷ்ணகிரி 635002. டாக்டர். எஸ்.ஆர். திருவளவன், 2/152, டாக்டர்என்.ராஜன்தோட்டம், அரசுபள்ளிஅருகில், சோக்காடு 635122 . ம. பாண்டியன், பாரூர்அஞ்சல், போச்சம்பள்ளி (தா) கிருஷ்ணகிரி 635201. பி. மதியழகன், 125, கொல்ரூர் , அஞ்சூர்அஞ்சல், பர்கூர் (தா), கிருஷ்ணகிரி, இரா. மதன், 85, அம்பேத்கர்நகர், சிங்காரப்பேட்டை ஊத்தங்கரை கிருஷ்ணகிரி, ஆர். சண்முகம், 2/210, மேல்கெங்காவரம், போச்சம்பள்ளி (தா), கிருஷ்ணகிரி 635206. கே.கே. சந்தோஷ், 7, இஸ்மாயில்தெரு, பழையப்பேட்டை, கிருஷ்ணகிரி 635001. எம். கதிர்வேல், நாகம்பட்டிகிராமம், மாடரஹள்ளிஅஞ்சல், பர்கூர்தாலுகா, கிருஷ்ணகிரி.

திருவள்ளூர் மத்திய மாவட்டம்

அமைப்பாளர் - வா.பார்த்திபன், 36 அம்பேத்கார்தெரு, காந்திநகர், பட்டாபிராம், சென்னை-600 072.

துணைஅமைப்பாளர் - கா. எட்வின், 257, தொழுவூர்குப்பம், தொழுவூர்ஊராட்சி, திருவூர்அஞ்சல், திருவள்ளூர்வட்டம்&மாவட்டம். பா. விஜயசாரதி, 2, கீசன்நகர், கீழயனம்பாக்கம், சென்னை 95. வி. உதயகுமார், 13, புதியகாலனி, , திருவூர்அஞ்சல், செவ்வாப்பேட்டைரோடு, திருவள்ளூர் 602025. பெ. ஜெகதீசன், 3, 3வதுகுறுக்குகணபதிதெரு, வசந்தம்நகர், ஆவடி, சென்னை. ச.காட்வின்பென்ஹர், சுந்தர் ராஜன் தெரு, திருமால்நகர், நம்பிநகர், பூவிருந்தவல்லி. சே. சந்தோஷ்குமார்,463, பாரதிதாசன்தெரு, எம். ஜி.ஆர். நகர், புல்லரம்பாக்கம், திருவள்ளூர் 602023.து. லோகநாதன்(எ) மகா,5, மாரியம்மன்கோயில்தெரு, கொத்தியம்பாக்கம், வெள்ளவேடு 600124. திருவள்ளூர்.

திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்

அமைப்பாளர் - பொன். தனுசு, மெயின்ரோடு, தானிப்பாடிகிராமம், தண்டராம்பட்டுவட்டம். திருவண்ணாமலை மாவட்டம்.

துணைஅமைப்பாளர் - கா. பூர்ணசந்திரன், 56, காந்திநகர், 10வதுதெரு, திருவண்ணாமலை. த.பரத், ஜெய்பீம்நகர், வேங்கிக்கால், திருவண்ணா மலை வட்டம். கி . ஜெகன், 12/7, வீராக்குட்டைத்தெரு, திருவண்ணாமலை. ப. ரமேஷ், 3/579, ஈஸ்வரன்கோயில்தெரு, கலசப்பாக்கம்கிராமம், திருவண்ணாமலை , தவக்குமார், 74, ரங்கசாலைதெரு, முத்தரசம்பூண்டிகிராமம், தென்னகரம்அஞ்சல், திருவண்ணாமலை மாவட்டம். பா. ஷெரீப், 83/41, எள்ளுக்குட்டைத்தெரு, திருவண்ணாமலை. சீ. ஸ்ரீதர், 1ஏ, எல்.எல்.ஜி.எஸ். நகர், திருவண்ணாமலை.

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் - அ. மணிகண்டன், எண் 6, கங்காதெரு, ஸ்டேட்பேங்க்பின்புறம், போளூர்டவுன்&வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.

துணைஅமைப்பாளர்கள், எச். மதன்குமார், 1, மேட்டுத்தெரு, காரணைகிராமம், கீழ்கொவளைவேடுபோஸ்ட், திருவண்ணாமலை. கபடிஞானமுருகன், 373, மேட்டுத்தெரு, பெருங்கட்டூர், வெம்பாக்கம், திருவண்ணாமலை. கே. கார்த்திக், 13, சாந்தாதெரு, ஆரணிப்பாளையம், ஆரணிவட்டம், திருவண்ணாமலை. எம். வசந்தகுமார், நெ. 43, பிள்ளையார்கோயில்தெரு, ஆரணிப்பாளையம், ஆரணிவட்டம், திருவண்ணாமலை. எம். கிஷோர்குமார், காமராஜர்நகர், பாலுடையார்தெருவிரிவு, தீயணைப்புநிலையம், வந்தவாசிடவுன்&வட்டம், திருவண்ணாமலை. ஈ. சரவணன், 1ஏ, பழையஅரசுமருத்துவமனைதெரு, போளூர்டவுன்&வட்டம். திருவண்ணாமலை. பையூர்ராஜேஷ், 21, பள்ளக்குத்தெரு, பையூர்கிராமம்&போஸ்ட், திருவண்ணாமலை.

நீலகிரி மாவட்டம்

அமைப்பாளர் - எ. ஆல்வின், கரக்கோடுமட்டம், சோலூர்மட்டம், நீலகிரி.

துணைஅமைப்பாளர்கள் - கே. மணி, 5/99, அச்சனக்கல்மேலட்டி, மனைப்பட்டு, கேத்தி, நீலகிரி, பொ. சிவக்குமார், 20/147 குசுமகிரி, கூடலூர், நீலகிரி643212. சே. விஜய ராஜ், 208/17 சத்தியமூர்த்திநகர், வண்ணாரப்பேட்டை, குன்னூர், நீலகிரி643102. ச. முத்துகுமார், குறிஞ்சிநகர், கொளப்பள்ளி(அ), பந்தலூர், நீலகிரி. வீ. மணிகண்டராஜ், 12/456, கோட்டஹால்ரோடு, கோத்தகிரி, நீலகிரி. ஜோ. நவீன், 5/12, சுண்டட்டி, எடக்காடு, நீலகிரி. ஜி.பி.தீபக், 11/375 கீழ்குந்தாகிராமம், நீலகிரி 643219.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் - கோல்டு. டி. பிரகாஷ், 17ஏ, காஜிதெரு, ஆலந்தூர், சென்னை 600016.

துணைஅமைப்பாளர்கள் - ம. ரேவதி, 3/118, பிள்ளையார்கோயில்தெரு, வெள்ளேரித்தாங்கல், செரப்பணஞ்சேரி, படப்பை, காஞ்சிபுரம் 601301. கா. விக்னேஷ், 4/26, ரகுபதிநகர், 3வதுதெரு, நங்கநல்லூர், சென்னை 600061 . 4. கா. செந்தில்குமார், 7, வேம்புலிசுபேதார்தெரு, ஆலந்தூர்600016. கே. தினேஷ், 9, 2தெரு, புருஷோத்தம்மன் நகர், வரதராஜபுரம், குன்றத்தூர்வட்டம், சென்னை 600048. க. சுகுணாகுமாரி, 4, கம்பர்தெரு, நிலமங்கைநகர், ஆதம்பாக்கம், சென்னை 600088. த. பிரேம்பாலாஜி, 24/121, காத்தான்தெரு, பெரியநத்தம், செங்கல்பட்டு 603220. ச. பிரபு, 3, குளக்கரைத்தெரு, அனகாப்புத்தூர், சென்னை 600070. சி. ரஞ்சித், 10, முனுசாமிதெரு, கணபதிபுரம், குரோம்பேட்டை 600044. பல்லாவரம், சென்னை 600043. 10.என்.என். கதிரவன், 3, அரிசிஆலைத்தெரு, நெய்குப்பிகிராமம், வெங்கப்பாக்கம்அஞ்சல், திருக்கழுக்குன்றம்.

ஈரோடு தெற்கு மாவட்டம்

அமைப்பாளர் - வி.எஸ். சங்கர், அஜந்தாஅப்பார்ட்மெண்ட்ஸ், சம்பத்நகர், ஈரோடு 11.

துணைஅமைப்பாளர்கள் - மல்யுத்தக. மோகன்ராஜ், வி.ஐ.பி. நகர், கருக்கம்பாளையம், புதூர், ஈரோடு. ம. மதுகிருஷ்ணன், 212, வள்ளிநகர், பெரிய செங்கோடம்பாளையம், வில்லரசம்பட்டி, திண்டல்அஞ்சல், ஈரோடு 3. ப. நவீன்குமார். சின்னையன் கவுண்டன்வலசு, ன்னத்தூர். டி.கே. சந்திரசேகர், தொட்டிபாளையம், வெள்ளோடு 12. ஆர். பி. சண்முகராஜா, 88/160, மேற்குவீதி, இச்சிபாளையம், கொடுமுடி 51. ச. கவின்சங்கர் , வாய்க்கால்மேடு, பிச்சாண்டாம்பாளையம், ஈரோடு 2, கோ. சுரேஷ், 273, பெரியசெட்டிபாளையம், 46, புதூர்கிராமம், ஈரோடு 2

"அண்ணா அறிவாலயம்"
சென்னை -18.
நாள்- 21.06.2023

தயாநிதிமாறன் எம்.பி.
செயலாளர்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி